TNTS040023452024

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்**
**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை :– திருமதி. கே. சுதாராணி, எம்.எல்.,**
**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை**
**தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி**

**2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 ஆம் நாள் புதன்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி திங்கள் 20–ஆம் நாள்)**

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.355/2024**
(CNR.No.TNTS04-002345-2024)

ஆலங்குளம் வட்டம், குருவன்கோட்டை கிராமம், எமராஜன்கோவில் தெரு, கதவு எண்.6/71A என்ற முகவரியில் வசித்துவரும் வேல்சாமி குமாரர், இந்து, 58 வயதுள்ள வைகுண்டம்

... மனுதாரர்

/எதிர்/

1. தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், குருவன்கோட்டை, சந்தனமாரியம்மன் கோவில் தெருவில் வசித்துவரும் முப்பிலிராஜகுமார் குமாரர், இந்து, சுமார் 32 வயதுள்ள மஹாநித்தீஸ்

2. தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், குருவன்கோட்டை, அம்மன் கோவில் கீழத்தெருவில், கதவு எண்.7/11–ல் வசித்துவரும் ராமசாமி குமாரர், இந்து, சுமார் 30 வயதுள்ள மகேஸ்வரன்

... எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 19.01.2023 |
| மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 21.11.2024 |
| மனு உத்தரவு நாள் | : | 05.08.2026 |

இந்த மனுவானது, கடந்த 09.07.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.P. குமார்பாண்டியன் அவர்களும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், மேற்படியார்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், மேற்படியார்களைப் பொறுத்து ஒருதரப்பாக்கப்பட்டுள்ள நிலையிலும், மனுதார் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**<u>தீர்வளிப்பு</u>**

இந்த மனுவானது, மனுதாரரால் மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 166–ன்கீழ் எதிர்மனுதார்களிடமிருந்து இழப்பீடாக ரூ.25,00,000/– கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>**

கடந்த 26.03.2022 ஆம் தேதியன்று, காலை 07.50 மணிக்கு, மனுதார் தனது மிதிவண்டியில், ஆலங்குளம்–நெட்டுர் சாலையில், பிள்ளையார் கோவில் அருகில் வடக்கு திசையிலிருந்து தெற்கு திசை நோக்கி, மேற்படி சாலையின் இடதுஓரமாக மெதுவாகவும், கவனமாகவும் சென்றுகொண்டிருந்தபோது, அதே சாலையில் தெற்கிலிருந்து வடக்காக, இந்த 2 ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட TN 76 AD 5946 என்ற Hero I Smart மோட்டார் சைக்கிளை, 1 ஆம் எதிர்மனுதார் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். அதனால் மனுதாரருக்கு வலது தொடையில் எலும்பு முறிவு காயமும், வலது, இடது கால் முட்டியில் கொடுங்காயமும், நெற்றியில் மேல் ஆழமான வெட்டுக்காயமும், வலது கை முட்டியில் கொடுங்காயமும் மற்றும் உடம்பில் பல்வேறு இடங்களில் காயங்கள் ஏற்பட்டன. உடனடியாக மனுதாருக்கு ஆலங்குளம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, அதன்பின் மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி

வைக்கப்பட்டார். விபத்தானது, 2ஆம் எதிர்மனுதாரின் வாகனத்தை விபத்தின்போது ஓட்டிய 1ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால் ஏற்பட்டதால், அவர் மீது ஆலங்குளம் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, குற்ற எண்.114/2022–ல் இ.த.ச., 279, 337 @ 338–ன்கீழ் குற்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் மனுதார், கொத்தனார் வேலை செய்துவந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/– வரை சம்பாதித்துவந்தார். விபத்திற்கு பின்பு மனுதாரால் அவரது இயல்பான வேலை எதையும் செய்ய இயலவில்லை. எனவே, மனுதாரருக்கு, எதிர்மனுதார்கள் இழப்பீடாக ரூ.25,00,000/– கொடுக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், 1, 2 எதிர்மனுதார்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், மேற்படியார்களைப் பொறுத்து தோன்றா தரப்பாக்கப்பட்டுள்ளனர்.

4. மனுதாரின் மனுவுரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இம்மனுவின் தீர்வுக்காக கீழ்க்கண்ட பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினைகள்</u>**

1. இந்த விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?

2. இம்மனுவில் மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா?

3. அவ்வாறு கிடைக்கத்தக்கது எனில் எந்த எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையை வழங்க கடமைப்பட்டவர்?

4. மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?

5. மனுதாரர் தரப்பில், மனுதார் வைகுண்டம் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மனுதார் தரப்பில், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், இம்மனுவில் நீதிமன்ற சான்றாவணம் எண்.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

6. **<u>பிரச்சனை எண்கள். 1 முதல் 3–க்கான தீர்வு</u>**

இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்தானது, யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது? என முதலில் பரிசீலனை செய்யும்போது, இம்மனுவின் மனுதார் வைகுண்டம் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், வழக்கு விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால்தான் ஏற்பட்டது என தெளிவாக மனுச் சங்கதிகளுக்கு ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். மேலும், மனுதார் தரப்பில், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.5 பார்வைமகசர் மற்றும் ம.சா.ஆ.6 மாதிரிவரைபடம் ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில், விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவினால்தான் ஏற்பட்டதாக புலனாகிறது. ஆக, இந்த மனுவைப் பொறுத்து, வழக்கு விபத்தானது, 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால்தான் ஏற்பட்டுள்ளது என மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்மனுதார்கள் இருவரும் தோன்றாதரப்பாராக உள்ளார்கள். எனவே, வழக்கு விபத்தானது, 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளதாக மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில், விபத்திற்கு மேற்படி 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையே காரணம் என முடிவு செய்யப்படுகிறது.

7. வழக்கு விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால்தான் ஏற்பட்டுள்ளது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.8 மருத்துவ ஆவணங்களை பரிசீலனை செய்கையில், விபத்தினால் மனுதாருக்கு காயங்கள்

ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது. எனவே, மனுதாருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக இழப்பீடு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

8. விபத்தானது, 1ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால்தான் ஏற்பட்டுள்ளது என ஏற்கனவே மேலே முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 1ஆம் எதிர்மனுதார் விபத்தின்போது ஓட்டிச்சென்ற வாகனம் 2ஆம் எதிர்மனுதாருக்கு சொந்தமானது என்றும் மனுதார் தரப்பில் குறிப்பிட்டுள்ளதற்கு ஆதரவாக, ம.சா.ஆ.3, மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வறிக்கை மற்றும் ம.சா.ஆ.4 வாகனப் பதிவு சான்றிதழ் ஆகியவைகள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், ம.சா.ஆ.3 ஆய்வின்போது, மேற்படி 2ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட வாகனத்தின் காப்பீடு குறித்து எவ்வித ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதாக ம.சா.ஆ.3 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி வாகனமானது விபத்து சமயத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததாக மனுதார் தரப்பிலும் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களையும் முன்னிலைப்படுத்தி எடுத்துரைக்கப்படவில்லை. ஆகவே, இந்த மனுவைப் பொறுத்து மனுதார் காயமடைந்து, சிகிச்சை எடுத்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில், விபத்து நடந்த தேதியில் மேற்படி வாகனத்தை 1ஆம் எதிர்மனுதார் அஜாக்கிரதையாக இயக்கியுள்ளதாலும், மேற்படி வாகனமானது 2ஆம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்டது என்பதாலும், விபத்து தேதியில் மேற்படி வாகனத்திற்கு காப்பீடு எதுவும் இல்லாததாலும், மனுதாருக்கான இழப்பீட்டு தொகையை 1, 2 எதிர்மனுதார்கள் சேர்ந்தோ, தனித்தனியாகவோ வழங்கவேண்டுமென்று முடிவு செய்யப்படுகிறது.

9. எனவே, விபத்திற்கு 1ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையே காரணம் என்றும், அவ்விபத்தினால் மனுதாருக்கு காயங்கள் ஏற்பட்ட நிலையில், மனுதாருக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதென்றும், அவ்விழப்பீட்டு தொகையை 1, 2 எதிர்மனுதார்களே வழங்கக் கடமைப்பட்டவர்கள் என்றும் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

10. **பிரச்சினை எண்.4–க்கான தீர்வு**

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதார் வைகுண்டத்திற்கு விபத்து நடந்த தேதியில் 58 வயது என்றும், மனுதார், கொத்தனாராக தொழில் செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/– வருமானம் ஈட்டிவந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அதனைப் பொறுத்து, மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இவ்வாயத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், விபத்தானது கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், கடந்த 2022ம் ஆண்டின் விலைவாசி உயர்வு, பொருளாதார நிலையின்படியும் மற்றும் மற்ற காரணிகளின் அடிப்படையிலும், மனுதாருக்கு தோராயமாக ரூ.9,000/– மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என முடிவு செய்யப்படுகிறது. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, அக்காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டு, மனுதார் குறைந்தது நான்கு மாத காலங்களுக்கு எந்த வேலையும் செய்திருக்க முடியாது என்பதை கருத்திற்கொண்டு, ஒரு மாதத்திற்கு ரூ.9,000/– வீதம், நான்கு மாதத்திற்கான வருமான இழப்பாக, 4 x 9,000 = மொத்தம் ரூ.36,000/– வருமான இழப்பு என்ற தலைப்பில் மனுதாருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

11. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், இதுசம்பந்தமாக மனுதாருக்கு ஏற்பட்ட பாதிப்பை கண்டறிய மாவட்ட மருத்துவக் குழுமத்திற்கு மனுதார் அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். மேற்படி மாவட்ட மருத்துவ குழுமம் மனுதாரை பரிசீலனை செய்து, அவருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர ஊனத்திற்கு ஆய்வு செய்து, அவருக்கு 36% பகுதியான நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அந்தச் சான்று நீ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இதனைப் பொறுத்து அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை மற்றும் நீ.சா.ஆ.1ன் அடிப்படையில், மனுதாருடைய உடலில் எந்த ஒரு பாகமும் முழுவதுமாக துண்டிக்கப்பட்டு, அவர் முன்பு செய்த வேலையான, கொத்தனார் தொழிலை செய்ய முடியாத அளவுக்கோ அல்லது வேறு வேலை எதுவும் செய்ய முடியாத அளவுக்கோ ஊனம் இருந்ததாக மனுதார் தரப்பில் வேறு ஆவணங்களை முன்னிலைப்படுத்தி

எடுத்துரைக்கப்படவில்லை. ஆகவே, இந்த மனுவை பொறுத்து பெருக்கல் குறியீட்டு எண் மூலம் மொத்த வருமான இழப்பினை கணக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என முடிவு செய்யப்படுகிறது. மேலும், ***Future General India Insurance Company Limited -Vs- Manivannan & Others, reported in 2024 (1) TNMAC Page 598 (D.B)*** என்ற வழக்கில் முடிவு செய்துள்ளபடி 1% ஊனத்திற்கு 7,000/- வீதம் 36% ஊனத்திற்கு 36 x 7000 = 2,52,000/- பகுதியான ஊனத்திற்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

12. மேலும், மனுதார் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டபோது, செலவீனங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.8 வரிசையிலான மருத்துவ ரசீதுகளை பரிசீலனை செய்கையில், அவைகளில் மொத்தம் ரூ.98,687/- மருத்துவ செலவீனத்திற்காக மனுதாருக்கு செலவானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களைத் தவிர மனுதார் தரப்பில் வேறு எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் மருத்துவ செலவீனத்திற்காக இவ்வாயத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே, மேலே குறிப்பிடப்பட்ட தொகையான ரூ.98,687/- மனுதாருக்கு மருத்துவச் செலவீனம் என்ற தலைப்பில் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

13. மேலும், மனுதார் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டதாகவும், அதன்பின்பு மனுதார் வெளிநோயாளியாகவும் சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளதாக மனுவிலும், தனது சாட்சிய, சான்றாவணங்களிலும் குறிப்பிட்டுள்ளதைக் கருத்திற்கொண்டும், மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மையை கருத்திற்கொண்டும், நீ.சா.ஆ.1 அறிக்கையை கருத்திற்கொண்டும் மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.50,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவுக்காக மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும்

முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருந்தபோதிலும், மனுதாருக்கு போக்குவரத்து செலவு என்ற தலைப்பில் ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என்று இவ்வாயம் முடிவு செய்கிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டு, அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மனுதாருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.20,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் இழப்பிற்காக ரூ.1,000/-மும், மனுதாரருக்கு மருத்துவமனையில் உதவியாக இருந்த நபரைப் பொறுத்து ஒரு நாளைக்கு ரூ.400/- வீதம் 60 நாட்களுக்கு 60 x 400 = 24,000/- Attendant Charges என்ற முறையில் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகை எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | 36% பகுதி நிரந்தர ஊனத்திற்காக | ரூ.2,52,000/- |
| 2. | வருமான இழப்புக்காக | ரூ.36,000/- |
| 3. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.20,000/- |
| 4. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.10,000/- |
| 5. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.50,000/- |
| 6. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/- |
| 7. | Attendant Charges-க்காக | ரூ.24,000/- |
| 8. | மருத்துவ செலவீனங்களுக்காக | ரூ.98,687/- |
| | **மொத்தம்** | **ரூ.4,91,687/-** |

எனவே, மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, மனுதாருக்கு ரூ.4,91,687/- இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டு, இவ்வாறாக, பிரச்சினை எண்.4-ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

14. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாருக்கு ரூ.4,91,687/-ஐ, 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தனியாகவோ மனு

தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5 சதவிகித வட்டியும், இம்மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001–ல் IFSC Code No – IDIB000T009 க்கு இ–மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், அதற்கான வட்டியையும், செலவுத்தொகையையும் வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதார் உடனடியாக இத்தீர்ப்பாயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.4,289.50/–ல், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/–ஐ கழித்து போக உள்ள தொகை ரூ.4,269.50/–ஐ மனுதார் இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.11,917/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

As per the Judgment of the Honourable High Court in Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd Versus Ayyanar and others, dated 11.05.2020. No separate decree passed.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05 ஆம் தேதியன்று திறந்த தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

K SUDHARANI

Digitally signed by K SUDHARANI
Date: 2026.08.05 19:36:41 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள்**

ம.சா.1 திரு. வைகுண்டம் (மனுதார்)

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 27.03.2022 | முதல் தகவல் அறிக்கையின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 26.03.2022 | விபத்து பதிவேட்டு அறிக்கையின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 03.05.2022 | இயக்க ஊர்தி ஆய்வாளரின் ஆய்வறிக்கையின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | – | TN76 AD 5946 வாகனத்தின் பதிவுச் சான்றிதழின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 27.03.2022 | பார்வைமகசரின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.6 | 27.03.2022 | மாதிரிவரைபடத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.7 | – | மனுதாருக்குரிய ஆதார் அடையாள அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் தாளின் ஒளிநகல்கள் |
| ம.சா.ஆ.8 | – | மருத்துவ ரசீதுகள் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** இல்லை

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| நீ.சா.ஆ.1 | 16.10.2025 | பகுதி நிரந்தர ஊனச் சான்றிதழ் |

K SUDHARANI Digitally signed by K SUDHARANI Date: 2026.08.05 19:37:06 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**இயக்கூர்தி விபத்து கோருரிமை அசல் மனு எண்.355/2024**

**தீர்ப்புரை (அசல்/வரைவு)**

**நாள் 05.08.2026**